| | | | | |
|---|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.154/2019 | | பி. சா .1 | தேதி.01.03.2023 | |
| பெயர் | திரு.வரதராஜன் | | வயது | 52 |
| த/பெ. | திரு. சுப்பையன் | | முகவரி | 1/146, விஜயா நகர்,<br>காளம்பாளையம் கிராமம் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | | மாவட்டம் | கோயமுத்தூர் |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

2. நான் இளநிலை வேளாண்மை அலுவலராக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வேலை பார்த்து வருகிறேன். எனது பணி அரசுப்பணி என்றால் சரிதான். நான் சொத்து வாங்க அரசின் அனுமதியை பெற்றனா என்றால்( இந்த பொருண்மைக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்பதால் மேற்கண்ட கேள்வியை கேட்க இயலாதென அனுமதி மறுக்கப்பட்டது.) சொத்தை விலைக்கு பெறுவதற்கு முன்பாக மூல ஆவணங்களை வாங்கி பார்த்து சட்டக் கருத்துரை பெறுவது வழக்கம் என்றால் சரிதான். ஆவணங்களை வாங்கி பார்த்தேன். எனக்கு முன்னால் வாங்கியவர் எல்லாம் சரியாக உள்ளதென சொன்னதால் நான்சட்டக்கருத்துரை பெறவில்லை.

3. மூல ஆவணங்களை நான் பரிசீலிக்கவில்லையா என்றால் நான் படித்து பார்த்தேன். நான் மூல ஆவணங்களை நான் சரியாக படித்து பார்க்கவில்லை என்றும், அதனால் மூல ஆவணங்களில் உள்ள அளவை சரியாக தெரிந்து கொள்ளாமல் இந்த சொத்தை விலைக்கு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. புல எண்.486/1 ல் மொத்தமாக 2.95 ஏக்கர் நிலம்தான் உள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே 2002 ம் ஆண்டில் வாதி வள்ளியம்மாள் 94 செண்ட் நிலத்தை விலைக்கு பெற்றதாக ஆவணங்கள் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. வாதியின் பெயருக்கான விலையாவணத்தை நான் சொத்து வாங்குவதற்கு முன்பாக பார்க்கவில்லை. நான் வாதியின் ஆவணத்தையும் பார்த்து தான் விலைக்கு பெற்றேன் என்றும்,, வாதி 94 செண்ட்நிலத்தை கிரையம் பெற்றது எனக்கு தெரியும் என்றும், அதை தெரிந்தும் தெரியாதென வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சொத்து வாங்குவதற்கு முன்பாக நான் சொத்தை அளந்து பார்த்துதான் வாங்கினேன். நான் அளந்து பார்த்து வாங்கியதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொத்தை அளந்து பார்க்காமல் வாங்கிவிட்டு

தற்போது வாதியின் சொத்திற்கு உரிமைகொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. எனது விலையாவணம் வாதிக்கு பிந்தைய விலையாவணம் என்பதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனது விலையாவணத்தில் அளவுகளை தவறாக எழுதிக்கொண்டு அதை பயன்படுத்தி வாதியின் சுவாதீனத்தை நான் தொல்லை செய்வதால் வாதி கோரியவாறு வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. எனக்கு சொத்தை விற்றவருக்கும் எனக்கு விற்ற அளவிற்கும் சொத்தில் உரிமையில்லாததால் அந்த வகையிலும் இந்த விலையாவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- P.K.Sivakumar**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.